**கிராமின் கிருஷி மவுசம் சேவா**

இந்திய வானிலை துறை

தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகம்

கோவை, தமிழ்நாடு

# அக்ரோமெட் ஆலோசனை புல்லட்டின்

**தேதி : 16-05-2023**

**கடலூர்(தமிழ்நாடு) வானிலை முன்னறிவிப்பு - அன்று வெளியிடப்பட்ட :2023-05-16 ( அடுத்த 5 நாட்களில் 8:30 IST வரை செல்லுபடியாகும்)**

| வானிலை காரணி | 2023-05-17 | 2023-05-18 | 2023-05-19 | 2023-05-20 | 2023-05-21 |
|---|---|---|---|---|---|
| மழையளவு (மி.மீ ) | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 |
| அதிக பட்ச வெப்பநிலை ( oசெ ) | 39.0 | 40.0 | 41.0 | 41.0 | 41.0 |
| குறைந்த பட்ச வெப்பநிலை (o செ ) | 27.0 | 28.0 | 29.0 | 29.0 | 28.0 |
| அதிக பட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 90 | 70 | 70 | 70 | 70 |
| குறைந்த பட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 30 | 30 | 30 | 30 | 40 |
| காற்றின் வேகம் (கி.மீ./மணி ) | 6 | 10 | 12 | 12 | 10 |
| காற்றின் திசை (கோணம்) | 200 | 180 | 200 | 200 | 200 |
| மேக மூட்டம் (ஆக்டா) | 6 | 2 | 2 | 3 | 3 |

## வானிலை சுருக்கம் / எச்சரிக்கை:

வரும் வாரங்களில் பெரும்பாலும் வறண்ட வானிலையே நிலவ வாய்ப்புள்ளது. அடுத்த ஐந்து நாட்களுக்கு ஒரளவு வானம் மேக மூட்டத்துடன் காணப்படும். காற்றின் ஈரப்பதம் 70-90% ஆகவும், பகல் நேரங்களில் 30-40% ஆக இருக்க வாய்ப்பு உள்ளது. அதிகபட்ச வெப்பநிலை 39.0-41.0 °C ஆகவும் குறைந்தபட்ச வெப்பநிலை 27.0-29.0 °C ஆகவும் இருக்கும். காற்றின் வேகமானது மணிக்கு 6-12 கி.மீ ஆக வீசக்கூடும்.

## பொது ஆலோசனை:

21.05.2023 முதல் 27.05.2023 வரை தமிழ்நாட்டில் மழை, குறைந்தபட்ச வெப்பநிலை, அதிகபட்ச வெப்பநிலை மற்றும் இயல்பாக இருக்கும்.

## குறுஞ்செய்தி :

| |
|---|
| அதிகபட்ச வெப்பநிலை அதிகரிக்க வாய்ப்புள்ளதால், பயிர்களில் சாறு உறுஞ்சும் பூச்சிகளின் தாக்கம் அதிகமாக இருக்க வாய்ப்புள்ளது. |

## பயிர் குறிப்பிட்ட ஆலோசனை:

| பயிர் | பயிர் குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| நெல் | 1. தற்பொழுது நிலவிவரும் சூழ்நிலையில் நெல் நாற்றங்காலில் இலைப்பேன் தாக்கம் தென்பட்டால் தயாமீதாக்ஷூம் 25% WG 100 கிராம்/எக்டர் அல்லது டைமீத்யோட் 1.5 மி.லி/லிட்டர் என்ற அளவில் தெளிக்கவும். 2. தற்பொழுது நிலவிவரும் வானிலையின் காரணமாக நெற்பயிரில் புகையான் தாக்கம் அதிகமாக காணப்படுகிறது. இதன் அறிகுறிகள் நீர்மட்டத்திற்கு மேலிருக்கும் பயிரின் அடிப்பகுதியில் இளங்குஞ்சுகள் மற்றும் முதிர்பூச்சிகள் ஒட்டிக்கொண்டிருக்கும். தாக்கப்பட்ட பயிர்கள் முற்றிலும் காய்ந்து "தீய்ந்த மாதிரி" காட்சியளிக்கும். மேலும் பயிர்கள் சாய்ந்துவிடும். இதைக் கட்டுப்படுத்த அதிகளவில் தழைச்சத்து இடுவதை தவிர்க்க வேண்டும். ஏக்கருக்கு பைமெட்ரோசின் 120 கிராம் என்ற அளவில் ஒட்டும் திரவம் (50 மிலி/ஏக்கர் மேக்னட்/டீபால்) கலந்து தெளிக்க வேண்டும். |

## தோட்டக்கலை குறிப்பிட்ட ஆலோசனை:

| தோட்டக்கலை | தோட்டக்கலை குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| தென்னை | 1. பசை தடவிய மஞ்சள் நிறப்பாலித்தீன் தாள்களை மரத்தை சுற்றிகட்டி முதிர்ந்த ஈக்களை கவர்ந்து அழிக்கலாம். 2. வெள்ளை ஈக்கள் அதிகளவு பரவும் போது என்கார்ஸியா ஒட்டுண்ணிகள், காக்ஸினெல்லிட் ஒட்டுண்ணிகள்/ பொறிவண்டுகள் மற்றும் கிரைசோபெர்லா இரைவிழுங்கிகள் ஆகிய நன்மை செய்யும் பூச்சிகள் தோப்புகளில் இயற்கையாகவே உருவாக ஆரம்பிக்கும். என்கார்ஸியா ஒட்டுண்ணிகள் அதிக அளவு உருவாகி வெள்ளை ஈக்களின் சேதத்தை 40 முதல் 70% அளவுக்கு குறைக்கின்றது. 3. அதிகபாதிப்பின் போது ஒரு லிட்டர் நீருக்கு வேப்பெண்ணெய் 20 மிலி அல்லது அசாடிராக்டின் 1.0% EC 2.0 மிலி/லிட்டர் தண்ணீரில் மருந்தை ஒரு லிட்டருக்கு 1.0 மி/லி ஒட்டும் திரவத்துடன் கலந்து தென்னை ஓலையின் அடிப்புறம் தெளிக்கவும். |

## உயிருள்ள விலங்குகள் குறிப்பிட்ட ஆலோசனை:

| உயிருள்ள விலங்குகள் | உயிருள்ள விலங்குகள் குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| பசு | 1. வெப்ப அயர்ச்சியை தடுக்க கால்நடைகளை குறிப்பாக கறவை மாடுகளை மதிய வேளைகளில் மேய்ச்சலுக்கு அனுப்புவதை தடுக்க வேண்டும். 2. அதிக உற்பத்தி திறன் உள்ள கலப்பின |

| உயிருள்ள விலங்குகள் | உயிருள்ள விலங்குகள் குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| | கறவை மாடுகள் வெப்ப அயர்ச்சியால் உற்பத்தி பாதிப்படைந்து பால் உற்பத்தி குறையும் அதனை தடுக்க நீர் தெளிப்பான் கருவியை கொட்டகையில் பொருத்தி பயன்படுத்த வேண்டும். |
| வெள்ளாடு | பகலில் 11 மணி முதல் 3.30 மணி வரை ஆடுகளை மேய்ச்சலுக்கு அனுப்ப வேண்டாம். ஆடுகளை நிழலில் கட்டி வைக்கவும். தூய்மையான குளிர்ந்த குடிநீர் எப்போதும் தர வேண்டும். எலக்ட்ரால் மருந்து ஒரு பாக்கெட் ஒரு லிட்டர் நீரில் கரைத்து வெப்ப அயற்சி ஏற்பட்ட ஆட்டிற்கு 250 மி.லி குடிக்க கொடுக்க வேண்டும். |